தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும்

இறுதிப் பரீட்சை - 2006/2007

**MCC 1201** – தொழிலுரிமைத்துவம்

காலம்: இரண்டு(02) மணித்தியாலங்கள்

| திகதி: 21.01.2007 | நேரம்: மு.ப 10.00 - ந.ப 12.00 |
|---|---|

ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.
எல்லா வினாக்களும் சம புள்ளிகளைக் கொண்டுள்ளன.

01. அநேகமான தொழிலுரிமையாளர்களினால் ஆரம்பிக்கப்படும் வியாபார முயற்சிகள் தேக்கமடைந்து அல்லது வளர்ச்சி குன்றும் நிலைமையினைக் குறுகிய காலத்தினுள் அடைகின்றன. இலங்கையில் தொழிலரிமைத்துவச் செயற்பாடுகள் ஏன் தேக்கமடைகின்றது என்பதற்கான மூன்று பிரதான காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக.

02. பெரிய தர வியாபாரங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள சிறிய தர வியாபாரங்கள் வெற்றிகரமாக வளர்ச்சியடைவதனைக் காணலாம். இவ்வாறு வளரச்சியடையும் சிறிய தர வியாபாரங்களுக்கு பங்களிக்கக்கூடிய, நீர் இனம் காணும் நான்கு (04) பண்புகளை உதாரணங்களுடன் விளக்குக.

03. அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பெரிய தர வியாபாரிகளுக்குப் பெரும் கடன்களை வழங்குவதைவிட, பெரும் அளவிலான சிறு கடன்களை சிறிய தர தொழிலுரிமையாளருக்கு வழங்க விரும்புகின்றன. இவ்வாறான சூழ்நிலை இடம் பெறுவதற்குரிய நான்கு (04) காரணங்களை, உமது அனுபவத்தினைக் கொண்டு விளக்குக.

04. உமக்குப் பரீட்சயமான நகர் அல்லது சந்தை இடமொன்றின் பெயரினைக் குறிப்பிடுக. நீர் குறிப்பிடும் இவ்விடத்தில் அமைக்கத் தகுந்த நான்கு (04) சிறிய வியாபாரங்களைக் குறிப்பிடுக. இவ்வாறு குறிப்பிட்ட நான்கு வியாபாரங்களிலிருந்து மிகவும் தகுதி வாய்ந்த வியாபாரத்தினைத் தெரிவு செய்வதற்காக நீர் கைக்கொள்ளும் செயல்முறைகளை படிப்படியாக விளக்குக.

05. க.பொ.த (சா.த) கற்ற உமது நண்பரொருவர், பணமிருப்பின் ஒரு சிறு வியாபாரத்தினை ஆரம்பித்து நடாத்துவது ஒரு பெரும் கடின முயற்சியாக விருக்காது எனக் கூறுகின்றார். திறந்த பல்கலைக் கழகத்தின் தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவம் கற்றவராகிய நீர், உமது நண்பரின் இக் கூற்றிக்கு என்ன பதிலளிப்பீர்? உமது அனுபவத்துடன் விபரிக்குக.

(பதிப்புரிமையுடையது)